முருகப்பெருமான் துணை

**மகான் அரிவாட்டய நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.01.2023, செவ்வாய்கிழமை

1. அன்னதான வள்ளலாக வந்த
ஆறுமுக அரங்க மகானே
அண்ணலே உமை போற்றி இனிதே
அறிவிப்பேன் சுபகிருது கலைதிங்கள்
2. திங்களிலே மூவைபீர் திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 17 ம் நாள் 31.01.2023, செவ்வாய்கிழமை)
தெரியவே அனுகூல ஆசிதனை
இங்கனமே அரிவாட்டய நாயனாரும்
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்பெற நற்குணங்கள் வளர
நன்மை தீமைகளை பகுத்தறிய
சலனம் கொள்ளா பொறிபுலனை
சாந்தமாக்கி வெற்றி காண
4. காணவே கலிவாழ் மக்கள்
கட்டாயம் முழுமை கண்டதொரு
ஞானவான்கள் திருவடி பற்றியே
நம்பிக்கை வைத்திட வேண்டும்
5. வேண்டியே வாழும் ஞானிகளை
விரும்பி ஏற்று தொடர்பு கூட்டி
தொண்டு வகையில் ஈடுபடுத்தி
தொண்டர்களாகத் தொடர வேண்டும்
6. தொடரவேத் தூய்மை யானவர்களாக
தெளிவுதிடம் முழுமை கண்டு
இடரை வெல்லும் மக்களாய்
எவருக்கும் தீங்கிழைக்கா வண்ணம்
7. வண்ணமுடன் ஜீவத் தயவே வடிவாகி
வாழும் காலமே மேலவர்களை
எண்ணம் வழி இணைத்து அழைத்து
ஏகாந்த சுகம் பெறக் கூடும்
8. கூடாத ஆக்கினைகள் கூட
கூனிக் குறுகி அஞ்சி ஓடியே
ஈடேறாது இவனிடம் எதுவுமென
ஏகியே வழிவிட்டு வளமாக்கும்
9. ஆக்கும் ஞான பலமுமாக
அகிலத்தில் அவதாரம் எடுத்து
பக்குவம் தரும் அரங்க ஞானி
பாதம்பற்ற இந்த மேல்நிலை

10. மேல்நிலைகளெல்லாம் வரமாகவே
முருகப்பெருமான் அருளாகவே
வல்லமைபட வந்து சேர்ந்து
வாழும் காலமே ஞானியாகும்

11. ஆகும் வாய்ப்பும் வரமுமாக
அரங்கனால் நிறைவேறக்கூடும்
செகத்தோர் அரங்கனை நாடிட
சித்திகள் யாவும் கைவரப்பெறுவர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—